Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 128

திங்கட்கிழமை 03 ஏப்ரல் 2023

பங்குனி 20 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# சிறுவர் இல்லத்துக்கு சட்டவிரோத அனுமதி!

## வடக்கு கல்வியமைச்சின் தன்னிச்சையான செயல்
## கட்டாய மதமாற்றம் செய்யப்பட்ட சிறுமிகள், பெற்றோர் விசாரணையில் வெளிவந்த திடுக்கிடும் தகவல்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலையில் கானான் ஜெப ஆலயத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிய மாணவர் விடுதியிலிருந்து 3 சிறுமிகள் தப்பித்துச் சென்றதைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், மாணவர் விடுதி சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின்கீழ் பதிவு செய்யப்படாமல் இயங்கியமை கண்டறியப் பட்டுள்ளது. அத்துடன் இந்த விடுதியில் இணைக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர் கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டுள்ளமையும் விசாரணையில் தெரியவந்துள் ளது. »11

## மோ.சைக்கிள் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஏப். 3
புதுக்குடியிருப்பில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் குழந்தை யேசு கோவில் வீதியில் »10

## யாழில் வாடகைக்காரை ஈடு வைத்தவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 3
வாடகைக்காரை கடன் வாங்கியவரிடம் ஈடு வைத்த நபர், அதற்கு உதவிய இருவர் »10

### முச்சந்தி முரளி







வெடுக்குநாறிமலையில்

## விக்கிரகங்களை வைக்காமல் ‘பல்டியடித்த’ அமைச்சர்கள்!

வழக்கு இருக்கிறதாம் என்று கதையளப்பு

வவுனியா, ஏப். 3
வெடுக்குநாறிமலையில் சிதைக்கப்பட்ட விக்கிரகங்கள் மீண்டும் வைக்கப்படும் என்று »10

## ‘மலையில் ஏறாமலேயே நடையைக் கட்டினர்!’

அமைச்சர்களை இனி நம்பிப் பயனில்லை
அடுத்த கட்டத்தை நிர்வாகமே தீர்மானிக்கும்
அறங்காவலர்சபை முடிவு

வவுனியா, ஏப். 3
வெடுக்குநாறி மலைக்கு வந்த அமைச்சர்கள் இருவரும் கீழே நின்று படம் காட்டினரே அன்றி மலையில் ஏறிக்கூடப் பார்க்கவில்லை. ஆகக் குறைந்தது சிவலிங்கத்தை மலையில் சும்மாவாவது வையுங்கள் என்று கேட்டோம். »10

## குருந்தூர் மலைக்கு முஸ்லிம்களும் உரிமை கோருகின்றனராம்!!!

வெடுக்குநாறிமலை அடிவாரத்தில் உளறினார் அமைச்சர் ஜீவன்

வவுனியா, ஏப். 3
முல்லைத்தீவிலுள்ள குருந்தூர் மலையை முஸ்லிம்களும் உரிமை கோருவதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். »11

யாழ். பல்கலையில்

## போதிய வரவின்மையால் பரீட்சைக்கு அனுமதியில்லை

ஆராய இன்று கூடுகிறது விசேட பீடச்சபை

யாழ்ப்பாணம், ஏப். 3
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் சிலரை, வரவு ஒழுங்கின்மை காரணமாக பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக் »11

துப்பாக்கிமுனையில்

## புல்மோட்டையில் புத்தர் சிலை



தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகளை அடாத்தாகப் பறிக்கிறது பிக்குகள் குழு

திருகோணமலை, ஏப். 3
திருகோண்மலை மாவட்டம் குச்சவெளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள புல்மோட்டை பொன்மலைக்குடா பகுதியிலுள்ள பொன்மலை »11

## கிளிநொச்சியில் மினிசூறாவளி

கிளிநொச்சி, ஏப். 3
முரசு மோட்டைப்பகுதியில் நேற்று வீசிய கடும் காற்றுக்காரணமாக வர்த்தக »04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தத்தை தமிழர் ஏற்கவேண்டும்!

## கொழும்புப் பல்கலைக்கழக சட்டப்பீட பேராசிரியர் சர்வேஸ்வரன் வலியுறுத்து

**கொழும்பு, ஏப். 3**

**அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை, தமிழர்கள் ஏற்றுக்கொண்டு அடுத்தகட்டம் நோக்கி நகரவேண்டும். மாகாணசபை முறைமை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது என்றாலும்கூட இன்றைய நிலையில் அதனை ஏற்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்று கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடப் பேராசிரியர் சர்வேஸ்வரன் தெரிவித்தார்.**

தந்தை செல்வாவின் 125ஆவது பிறந்ததின நிகழ்வு செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தந்தை செல்வா நினைவுப் பேருரை ஆற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழ்மக்களின் அரசியல் பயணப் போராட்டம் விரைவில் முடிவுக்கு வரும் ஒரு விடயமல்ல. அது நீண்ட தொரு பயணமாகவே இருக்கப் போகிறது. எனவே, தற்போதைய சூழலில் 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தமிழ்மக்களாகிய நாம் ஏற்றுக்கொண்டு அடுத்தகட்டத் தீர்வு நோக்கி நகரவேண்டும்.

உலகத்திலுள்ள அபிவிருத்தி அடைந்த நாடுகளை நாங்கள் எடுத்து நோக்கினால் ஏதேனும் ஒரு வகையில் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட்ட நாடுகளாகவே அவை இருக்கின்றன.

எனவே, மா்காணசபை முறைமை என்பது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முதற்படி மாத்திரமன்றி ஒரு நாட்டின் அபிவிருத்திக்கும் அவசியமானது.

அதிகாரப் பரவலாக்கம், அதிகாரப் பகிர்வு ஆகிய விடயங்கள் இன்று பலரையும் குழப்பியுள்ளது.

13ஆவது திருத்தத்துக்குள் உள்ளடக்கப்பட்டிருப்பது அதிகாரப் பரவலாக்கம், சமஷ்டி முறை அரசமைப்புக்குள்தான் அதிகாரப் பகிர்வு காணப்படுகிறது.

நாங்கள் இடங்களைப் பாதுகாக்க வேண்டுமானால் அந்த இடங்களில் மக்கள் இருக்கவேண்டும். மக்கள் வசித்தால்தான் நாம் எமது இடங்களைப் பாதுகாக்கமுடியும். எனவே, இடங்களைப் பாதுகாக்க வேண்டுமானால் தற்போதைய மாகாணசபை முறையை ஏற்று அதனை இயன்றவரை வினைத்திறன் உள்ளதாக ஆக்கவேண்டும். 13ஆவது திருத்தச் சட்டமும், மாகாணசபை முறைமையும் இனப் பிரச்சினைக்கான தீர்வாக இருக்கமுடியாது. சமஷ்டி முறையிலான தீர்வே தமிழ்மக்களுக்கு வழங்கப்படவேண்டும்.

இலங்கையின் உயர்நீதிமன்றப் பிரதம நீதியரசர்கூட சமஷ்டி என்பது ஒரு பிரிவினை அல்ல. தனி நாடும் அல்ல. அது ஆட்சி முறைமையின் ஒரு வடிவம் என்று தெரிவித்துள்ளார். ஆனாலும், பெரும்பான்மை இன மக்களைப் பொறுத்தவரை மாகாணசபை முறைமைக்கே அஞ்சுகின்ற ஒரு நிலைமை காணப்படுகிறது. ஆகவே, தென்னிலங்கை மக்களுக்கு 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலும், சமஷ்டி தொடர்பிலும் நியாயப்பாடான கருத்துக்களை எடுத்துக்கூறி அவர்கள் மத்தியில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தவேண்டும்.

இலங்கையில் வாழும் தமிழ்மக்களுக்கு அவர்கள் கேட்கின்ற முழுமையான உரிமைகளையும் வழங்குவது அல்ல. தன்னுடைய நலன்களுக்காக முழு இலங்கையையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதிலேயே இந்தியா தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருகிறது.

தமிழ்மக்களுக்கான தீர்வாக 13ஆவது திருத்தச் சட்டத்தையே இந்திய வெளிவிவகாரத்துறை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறது. இதற்கு அப்பாலான தீர்வுத் திட்டம் எதனையும் இந்தியா இதுவரை முன்வைக்கவில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தின் குறைபாடுகளை இந்தியாவுக்கு எடுத்துக்கூறி மாகாணசபை முறைமையை மேலும் வினைத்திறனாக ஆக்குவதுதான் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முதலாவதுபடி - என்றார். (ம-66)

---

### மனித நுகர்வுக்கு உதவாத

# 102 கிலோ இறைச்சியுடன் இரு இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 3

மாட்டை சட்டவிரோதமாக இறைச்சியாக்கினர், மனித நுகர்வுக்கு ஒவ்வாத வகையில் 102 கிலோ இறைச்சியை எடுத்துச்சென்றனர் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பொலிஸாரால் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வசாவிளான் - குட்டியப்புலம் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-23)

---

### வடக்கு — கிழக்கில் இதுவரை

# 204 சதுர கிலோமீற்றரில் கண்ணிவெடிகள் அகற்றம்!

கிளிநொச்சி, ஏப். 3

இலங்கையில் இதுவரை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 204 சதுர கிலோமீற்றருக்கும் அதிகமான நிலப்பரப்பிலிருந்து கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு, அந்த நிலப்பரப்புகள் பொதுமக்களுக்காக விடுவிக்கப்பட்டுள்ளன என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ். சத்யானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவா சர்வதேச மனிதநேய கற்றலுக்கான கண்ணிவெடி அகற்றும் நிலையத்தின் ஆதரவுடன் தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன்கீழ், நாட்டை கண்ணிவெடிகளில் இருந்து விடுவிக்க தேசிய மற்றும் சர்வதேச பங்காளர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றவுள்ளோம். இரண்டு சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் இரண்டு உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களும் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதுவரை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 204 சதுர கிலோமீற்றருக்கும் அதிகமான நிலப்பரப்பில் இருந்து கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு பொதுமக்களுக்காக விடுவிக்கப்பட்டுள்ளன - என்றார். (ம)

---

# உண்மை ஆணைக்குழுவால் பரிகாரங்கள் வழங்கப்படுமாம்

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 3

தென்னாபிரிக்காவைப் பின்பற்றி, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், அந்த ஆணைக்குழு பரிந்துரைகளை வழங்குவதுடன் நின்றுவிடாது பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரத்தை வழங்கும் வல்லமையுடன் இருக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தென்னாபிரிக்காவுக்கு அண்மையில் பயணம் செய்தபோது அந்த நாட்டின் ஜனாதிபதி சிறில் ரமபோஷ, முன்னாள் ஜனாதிபதி எம்பகி, அரசமைப்பு முன்னாள் அமைச்சர் மிச்சல் மசூதா மற்றும் தற்போதைய வெளிவிகார அமைச்சர், நீதி அமைச்சர் உள்ளிட்டவர்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டு நீண்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தோம்.

இந்தக் கலந்துரையாடல்களின்போது பல்வேறு அனுபவங்களை நாம் பெற்றுக்கொண்டுள்ளோம். அந்த வகையில் விரைவில் உள்நாட்டில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பொறிமுறையொன்றை ஸ்தாபிக்கவுள்ளோம். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உண்மையில் இந்த ஆணைக்குழுவின் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு பொது மகனுக்கும் பரிகாரத்தை வழங்குவதே நோக்கமாகும் - என்றார். (ம)

---

# மகாவலித் திட்டத்தின்கீழ் மிகப்பெரும் நிலப்பறிப்பு!

மகாவலித் திட்டத்தின்கீழ் சுமார் 10 இலட்சம் காணித்துண்டுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றில் ஒருதுண்டு காணிகூட தமிழர்களுக்கு வழங்கப்படவில்லை. மிகப்பெருமளவில் நிலப்பறிப்பொன்றை முன்னெடுப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்று - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்தில், இந்துக்கள் தற்காலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர்க் காலப்பகுதியில் தமிழர்களுடைய புராதன அடையாளங்கள் மற்றும் வரலாற்று நிலங்கள் பாதுகாக்கப்பட்ட நிலையில், தற்போது தமிழர்களிடமிருந்து அந்த நிலப்பகுதிகளைக் குறைக்க வேண்டும் என்பதில் தென்னிலங்கை முழுமூச்சுடன் செயற்பட்டு வருகின்றது. மாவட்டச் செயலகமோ அல்லது பிரதேச செயலகமோ கேள்வி கேட்க முடியாத அளவுக்கு மகாவலி அதிகாரசபையிடம் அதிகாரங்கள் குவிந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் சுமார் 14 ஆயிரம் பேர் காணிகள் அற்ற நிலையில் இருக்கின்றனர். ஆயினும், மகாவலித் திட்டத்தின் கீழ் ஒரு துண்டுக் காணிகூட தமிழர்களுக்கு வழங்கப்படவில்லை - என்றார். (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதச் சட்டம்

# புதியதற்கு எதிர்ப்பு என்றால் இப்போதுள்ளதைத் தொடரவா?

## குதர்க்கமாகக் கேட்கிறார் நீதி அமைச்சர்

**கொழும்பு, ஏப். 3**

**புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எவரேனும் எதிர்ப்பெனில் எமக்கு இரண்டு மாற்றுவழிகள் உள்ளன. புதியதை விடவும் தற்போதுள்ள சட்டம் சிறந்ததெனக்கூறி அதனைத் தக்கவைத்துக்கொள்ளமுடியும். இரண்டாவதாக, சிறந்த யோசனை இருப்பின் அது தொடர்பில் எம்மிடம் கூறலாம், அது பற்றிப் பரிசீலிக்கலாம் - இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.**

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் உள்ளது.

அந்த நாட்டில் பயங்கரவாதம் உள்ளதாலா மேற்படி சட்டம் நடைமுறையில் உள்ளது? பயங்கரவாதம் எப்போது உருவாகுமென்பதை ஜோதிடர்களால் கணித்துக்கூறமுடியாது.

பயங்கரவாதம் தேசிய பாதுகாப்பு மற்றும் மனித வாழ்வுக்கு அச்சுறுத்தலான விடயம்.

எனவே, அதனை ஒடுக்குவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அரசு தயாராக இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அத்தகையதொரு அரசு இருந்து பயன் இல்லை.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மனித உரிமையை மீறும் வகையில் உள்ளதெனில், யார் வேண்டுமானாலும் நீதிமன்றம் சென்று சுட்டிக்காட்டலாம். அதற்காக இரு வாரங்கள் உள்ளன. அதற்கான சட்ட உதவியை வழங்குவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம் - என்றார்.

(அ-ஒ-44)

# பொருளாதார மீட்சிக்காக சரியான வழியில் பயணம்

## இலங்கை தொடர்பில் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 3

பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீட்சி பெறுவதற்காக இலங்கை அரசாங்கம் சரியான பயணத்தை ஆரம்பித்துள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை தொடர்பான ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

பசுமை வலுசக்தி உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள அவர், கொழும்பு ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் பொருளாதார மீட்சிக்காக உடன்டியான தெரிவாக சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் எல்லையைப் பெறுவதற்காக உரிய அணுகுமுறையைச் செய்து அதனைப் பெற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாட்டை நான் பாராட்டுகின்றேன்.

அத்துடன், இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட இலங்கையின் இருதரப்பு கடன்வழங்குநர்களின் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொண்டமைக்காகவும் அவரது தலைமைத்துவத்தைப் பாராட்டும் அதே நேரம் குறித்த நாடுகளும் இலங்கை விடயத்தில் கொண்ட கரிசனைகளையும் தீர்மானங்களையும் வரவேற்கின்றேன் - என்றார்.

(ம)

# வல்லரசுகளின் போட்டியில் இலங்கை மௌனித்திருக்கும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 3

இந்துமா சமுத்திரத்தில் வல்லரசுகளுக்கிடையிலான போட்டித்தன்மை தீவிரமடைந்துள்ளது. இதில் பக்கச் சார்பின்றி இலங்கை மௌனித்திருக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் விமானப்படைத் தளத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

எவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொண்டாலும் அவற்றிலிருந்து மீளவேண்டும். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி அதனையும் உறுதிப்படுத்தவேண்டும். போர் நிறைவடைந்ததன் பின்னர் சிறுசிறு பயங்கரவாதச் செயற்பாடுகள் பதிவாகியுள்ளன. இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாமையை உறுதிப்படுத்தவேண்டும்.

இவற்றுக்கு அப்பால் தற்போது பிராந்தியத்தில் வல்லரசுகளுக்கிடையிலான போட்டிகள் தீவிரமடைந்துள்ளன.

ஆரம்பத்தில் இப்போட்டித்தன்மை பசுபிக் சமுத்திரத்தில் காணப்பட்டபோதிலும், தற்போது இந்து சமுத்திரத்திலும் தாக்கம் செலுத்துகின்றது. வல்லரசுகளுக்கிடையிலான போட்டியில் இயன்றவரை இலங்கையை விலக்கி வைத்திருக்கவே முயற்சிக்கின்றேன் - என்றார்.

(ம)

# வடபகுதியில் மழை; கடற்பரப்பில் அலை

கொழும்பு, ஏப். 3

வடக்கு மாகாணத்தில் சில இடங்களில் மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது என்றும் வடக்கு கடற்பரப்புக்கள் காற்றுடனும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்றும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் இன்று பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுகின்றது. சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

இதன்போது மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது.

(ம)




கனநாள் வராமல் இருந்ததால பட்சியை எல்லாரும் மறந்திருப்பியள். ஆனால், எரிக் சொல்ஹெய்மை எங்கட ஆக்கள் அவ்வளவு லேசில மறந்திருக்கமாட்டினம். அந்தளவுக்கு ஒருகாலத்தில ஆள் கடும் பேமஸ். இலங்கை அரசாங்கத்துக்கும் இயக்கத்துக்கும் நடந்த பேச்சுவார்த்தையில இவர்தான் புறோக்கர் மாதிரி அங்கையும், இஞ்சையும் ஓடித்திரிஞ்சவர். போதாக்குறைக்கு இஞ்ச என்னென்ன கதைச்சவை எண்டு இடைக்கிடை இந்தியாவுக்கும் போய் சொல்லிப்போட்டு வந்தவர். சண்டை முடிஞ்சபிறகு ஆளின்ர அட்ரஸையே காணேலை. முள்ளிவாய்க்காலில இப்பிடி ஒரு சோகமான முடிவு வாறதுக்கு சொல்ஹெய்மும் ஒரு முக்கியமான காரணம் கண்டியளோ.

ரணில் ஜனாதிபதியானவுடன் செய்த முதல் வேலை, எரிக் சொல்ஹெய்மை தன்ர 'காலநிலை ஆலோசகரா' நியமிச்சதுதான். ஆனால், அப்பிடியொரு பதவியைக் குடுத்து அதைவைச்சு கனக்க பிளான் ரணில் போட்டிருக்கிறார். இனப்பிரச்சினை விசயத்திலயும் சொல்ஹெய்மை வைச்சு திரும்ப ஒரு ஹேம் ஆடுறதும் அதில ஒண்டு. இலங்கையில உள்ள வளங்களை வெளிநாடுகளுக்கு விக்கிற புறோக்கராகவும் அவரைப் பாவிக்கலாமெண்டது மற்றப் பிளான். அதானி குழுமத்துக்கும் சொல்ஹெய்முக்கும் கடும் வாரப்பாடு இருக்கு. அதால அதானி குழுமம் சொல்லித்தான் , இப்பிடியொரு பதவி சொல்ஹெய்முக்கு குடுபட்டிருக்கலாம் எண்டும் ஒரு கதை அடிபடுகுது. சொல்ஹெய்மும் வாங்கினதுக்கு மேலால கூவத் தொடங்கிட்டார். மன்னாரில அதானி குழுமம் காற்றாலை மின்சாரத்திட்டத்தை செய்யிறதுக்கு அங்கத்தைச் சனம் கடும் எதிர்ப்பு. அந்த எதிர்ப்புக்கு பின்னுக்கு அங்கத்தை கிறிஸ்தவ மதகுருமார் தான் நிக்கினம் எண்டு அரசாங்கமும், அதானி குழுமமும் நம்புகினம். இப்பிடி எதிர்ப்புகள் வந்தால் அதைச் சமாளிக்கிறத்துக்குத் தானே சொல்ஹெய்முக்கு சம்பளம் குடுக்கினம். எப்பவும் தன்ர வேலையில சொல்ஹெய்ம் கெட்டிக்காரன். இதிலையும் எப்பிடியோ 'ஒருவழியா' பாதர்மாரை தன்ர பக்கம் கொண்டந்திட்டார் எண்டு கேள்வி.

அதாலதான் முன்னாள் ஆயர் ராயப்பு ஜோசப்பின்ர நினைவுநாளுக்கு சொல்ஹெய்மும் மினக்கெட்டு போனவர். போனகையோட அப்பிடியே அங்கத்தை சனத்தின்ர நாடிபிடிச்சும் பாத்திருக்கிறார். ஆனால், பாதர்மாரை மடக்கினமாதிரி அவரால சனத்தை மடக்கமுடியேலையாம். சனம் கடைசி மட்டும் காற்றாலை மின்சாரத் திட்டத்தை கொண்டுவரவிடமாட்டம் எண்டு நிண்டிருக்குதுகள். அதால ஆள் நைஸா அங்கையிருந்து வெளிக்கிட்டு கொழும்பில போய், 'இந்தத் திட்டத்தில ஒரு தீமையும் இல்லை. ஆனால், இந்தச் சனம் மொக்குத்தனமா எதிர்க்குது' எண்டு புலம்பித்தள்ளியிருக்கிறார்.

எப்பவும் 'சம்பந்தம்' குழம்பினால், புறோக்கருக்குத்தானே கவலை.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞனின் சடலம் மீட்பு

சுழிபுரம் - பாண்டவட்டையிலுள்ள வீடொன்றில் தூக்கிலிருந்து இளைஞரின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது. அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)


**வேலையாள் தேவை**

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு கணக்காளர் தேவை. (ஆண்/ பெண்) (CS24277) (J-1)

**077 777 5068**


## சுப்பர் ஓவரில் வென்றது இலங்கை

இலங்கை மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது இருபதுக்கு இருபது ஆட்டத்தில் சுப்பர் ஓவரில் வெற்றியைப் பதிவு செய்தது இலங்கை அணி. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பை தெரிவு செய்தது நியூஸிலாந்து அணி.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட இருபது பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இலங்கை அணி சார்பாக அதிகபட்சமாக சரித் அசலங்க 41 பந்துகளில் 67 ஓட்டங்களையும் குசல் ஜனித் பெரேரா 45 பந்துகளில் 53 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக நீசம் 2 இலக்குகளையும் மில்ன் மற்றும் லிஸ்டர் தலா ஓர் இலக்கு வீதமும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி 8 இலக்குகளையிழந்து 196 ஓட்டங்களைப் பெற்று போட்டியை சுப்பர் ஓவர் வரை இட்டுச் சென்றது. அதிகபட்சமாக டாரில் மிச்சல் 44 பந்துகளில் 66 ஓட்டங்களையும் மார்க் சப்மன் 23 பந்துகளில் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் சானக்க, ஹசரங்க மற்றும் மடுசன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் தீக்ஷன மற்றும் மடுசங்க தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

வெற்றியைத் தீர்மானிக்கும் சுப்பர் ஓவரை வீசுவதற்காக அழைக்கப்பட்ட மகீஸ் தீக்ஷன சிறப்பான முறையில் பந்து வீசி நியூஸிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை 8 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியதோடு இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினார். பதிலுக்கு 9 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய குசல் மெண்டிஸ் மற்றும் சரித் அசலங்க இணை 4 பந்துகள் மீதமிருக்கையில் வெற்றியிலக்கை அடைந்தது. இதன்படி மூன்று ஆட்டங்கள் கொண்ட தொடரில் 1:0 என்ற நிலையில் முன்னிலை வகிக்கிறது இலங்கை அணி. போட்டியின் ஆட்டநாயகனாக சரித் அசலங்க தெரிவு செய்யப்பட்டார். (ஓ-ரி-1

## ராஜஸ்தான் ரோயல்ஸ் இமாலய வெற்றி

ஐ.பி.எல். போட்டியின் 4ஆவது ஆட்டத்தில் சன் ரைசர்ஸ் அணியை 72 ஓட்டங்களால் வீழ்த்தி மிகப்பெரிய வெற்றியைப் பதிவு செய்தது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி.

சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் சொந்த மைதானமான ராஜீவ் காந்தி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை எதிர்த்து சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சன் ரைசர்ஸ் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் அசத்தலான துடுப்பாட்டத்தின் உதவியுடன் நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 203 ஓட்டங்களைக் குவித்தது. துடுப்பாட்டத்தில் ஜசாஸ்வி ஜைஷ்வால் 37 பந்துகளில் 54ஓட்டங்களையும் ஜோஸ் பட்லர் 22 பந்துகளில் 54 ஓட்டங்களையும் அணித்தலைவர் சன்ஜு சாம்சன் 32 பந்துகளில் 55 ஓட்டங்களையும் பெற்றுக்கெண்டனர். பந்துவீச்சில் சன் ரைசர்ஸ் சார்பில் நடராஜன் மற்றும் பரூக்கி இருவரும் தலா 2 இலக்குகளையும் மாலிக் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

204 எனும் இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய சன் ரைசர்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து வெறுமனே 131 ஓட்டங்களையே பெற்றது. அந்த அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் யாரும் பெரிதாகச் சோபிக்காத நிலையில் மத்தியவரிசை வீரர்களின் நிதானமான துடுப்பாட்டத்தின் மூலம் இவ் ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொண்டது.

அப்துல் சமாத் மாத்திரம் அதிகபட்சமாக ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங் களைப் பெற்றுக்கொடுத்தார். சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்திய ராஜஸ்தான் அணி சார்பாக சகால் 17 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து 4 இலக்குகளையும் போல்ட் 2 இலக்குகளையும் ஹோல்டர் மற்றும் அஸ்வின் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தி அணியின் வெற்றியை உறுதி செய்தனர். துடுப்பாட்டத்தில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோஸ் பட்லர் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ஒ-ரி-1)

### கிளிநொச்சியில்...

நிலையங்களின் கூரைத்தகடுகள் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் பொருள்கள் மழையில் நனைந்து சேதமடைந்துள்ளன. கால்நடைபண்ணையிலும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. கால்நடைகளின் கொட்டகைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. அத்துடன் வீதிகளிலிருந்த மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன. (அ-ஓ,113)



## மரண அறிவித்தல்



தோற்றம் 04 - 09 - 1968

மறைவு 01 - 04 - 2023

### அமரர் பங்கிராஸ் அலஸ்விமலதாஸ்

பங்கிராஸ் அலஸ்விமலதாஸ் நேற்று முன்தினம். (01.04.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அருணாசலம் பங்கிராஸ் காலஞ்சென்ற நீற்றா பங்கிராஸ் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணராஜா அம்பிகாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், றோகினியின் அன்புக் கணவரும், ஜஸ்ரின், ஜஸ்ரிகா, சதுஸ்ரிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாளனின் அன்பு மாமனாரும், ஒக்ஸ்ஸனாவின் அன்புப் பேரனும், அன்ரன், மேரிகிளாரா, அமலன் மேரி புளோரன்ஸ், அருட்தந்தை அலன்நிர்மலதாஸ் (செபமாலை தாசர் சபை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சூரியகலா, விஜேந்திரா, ரவீந்திரன், ஜெயந்திரன், சுரேந்திரன், சித்திரகலா, ராஜேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (03.04.2023) திங்கட்கிழமை இல 55/2 கணேசபுரம் கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 9.30 மணியளவில் ஜெயந்திநகர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுத்து ஆனந்தநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

077 441 4374 (CR39589)(J-1)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சி தரும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பிணக்குகள் நீங்கும்.

**மிதுனம்** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.

**கடகம்:** முயற்சிகள் சாதகமாக முடியும். பிள்ளைகள் வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவுமிருக்காது. செலவுகள் ஏற்படும். பணவரவுக்கும் வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். அனுசரித்துச் செல்வது நல்லது. ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். அனுகூலம் உண்டாகும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம்.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்கு மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயல்படுவீர்கள்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்பட்டு திக்கு முக்காட வைக்கும். காரியம் இழுபறியாகும். பொறுமையுடன் நடந்துகொள்வது நல்லது.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத்துணை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதரர்களால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## உள்ளதையும் கெடுத்தவர்கள்

கூரையேறிக் கோழிபிடிக்க முடியாதவன் வானமேறி வைகுண்டம் போக ஆசைப்பட்ட கதையாகிவிட்டது, வெடுக்குநாறிமலையில் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்யப்போன அமைச்சர்களின் செயற்பாடு. அரசாங்கத்தில் செல்வாக்குள்ள அமைச்சர்களாக வடக்கில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸும், மலையகத்தில் ஜீவன் தொண்டமானும் தம்மைத்தாமே சொல்லிக்கொள்வதுண்டு. ''நாங்கள் நியாயமான வகையில் கேட்டால் அதை அரசாங்கம் தரும்'' என்பதே இவர்கள் அடிக்கடி மக்களிடத்தே சொல்லிக்கொள்ளும் மந்திரம். ஆனால், நேற்று இந்த அமைச்சர்கள் ''வெடுக்குநாறி மலையில் உடைக்கப்பட்ட விக்கிரகங்களுக்குப் பதிலாக புதிய விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்யப்போகின்றோம்'' என்று மக்களுக்கு 'படம்காட்ட' நினைத்தும், தொல்லியல் திணைக்களத்தின் முன்னால் எதுவும் செய்யமுடியாதவர்களாக தலைகுனிந்தபடி திரும்பிவந்ததுதான் மிச்சம். இத்தனைக்கும் குறித்த இரு தமிழ் அமைச்சர்களும், வெடுக்குநாறிமலையின் தொல்லியல்தன்மைக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படுத்திவிட்டு சிலைகளை வைக்க முனையவில்லை. ஏற்கனவே இருந்த விக்கிரகங்களையும், உடைக்கப்பட்ட விக்கிரகங்களுக்கான பதிலீட்டு விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்யவே விழைந்தனர். ஆனால், அதற்கும் அனுமதிக்கமுடியாது என்று தொல்லியல் திணைக்களம் அடியோடு மறுத்துவிட்டது. கடைசியாக, ''நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் இப்போதைக்கு எதுவும் செய்யமுடியாது'' என்று சொல்லிவிட்டு அமைச்சர்கள் தங்கள் படைபரிவாரங்களோடு, புறப்பட்டுவிட்டனர்.


இதைச் சொல்லிவிட்டுச் செல்வதற்காகவா இவ்வளவு தடபுடல்களோடு அமைச்சர்கள் வெடுக்குநாறிமலைக்கு வந்தனர்? மக்களைப் போராட விட்டிருந்தாலாவது இதைவிட தீர்க்கமான முடிவொன்றை எட்டியிருப்பார்கள். ஆனால், இப்போது 'உள்ளதையும் கெடுத்த நொள்ளிக்கண்ணர்களாக' அமைச்சர்கள் எல்லாவற்றையும் குழப்பியடித்திருக்கிறார்கள். கூடவே தங்கள் ஆட்சி நிலவும் காலத்தில், ஒரு திணைக்களத்தின் முன்னால் தாம் வெறும் செல்லாக்காசுகளே என்பதையும் இந்த அமைச்சர்கள் நிரூபித்திருக்கிறார்கள். உண்மையில் இந்த அமைச்சர்கள் வெடுக்குநாறிமலையில் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்யவரவில்லை. அவர்கள் வெடுக்குநாறிமலை விக்கிரகங்கள் உடைக்கப்பட்டதால் உண்டான கொதிநிலையைத் தணிக்கவே ரணிலால் அனுப்பப்பட்டுள்ளனர் என்பது இப்போது மக்களுக்குப் புலனாகியுள்ளது. ஏனெனில், வெடுக்குநாறிமலையிலுள்ள விக்கிரகங்களை உடைத்து அழித்தால் ஆலயத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே சிலநாட்கள் போராடுவார்கள், காலப்போக்கில் அந்தப் போராட்டமும் வீரியமிழந்து போகும். அப்போது திட்டமிட்டபடி வெடுக்குநாறிமலையில் விகாரை ஒன்றைக் கட்டுவிக்கலாம்' என்பதே சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் திட்டமாக இருந்தது.

ஆனால், பேரினவாதம் எதிர்பாராதவகையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலய உடைப்பு ஒட்டுமொத்த தமிழர்களின் ஆன்மாவையும் உலுப்பிவிட, பேரெழுச்சியோடு தமிழர் தாயகமெங்கும் போராட்டங்கள் வெடித்தன. இதை அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. இத்தகைய ஆர்ப்பாட்டங்களால் சர்வதேசத்தின் முன்னால் இலங்கை போடுகின்ற 'நல்லிணக்க' வேடம் கலைந்துபோய், கைக்கெட்டிய நாணய நிதிய உதவியின் எஞ்சிய பங்கு வாய்க்கெட்டாமல் போய்விடுமோ? என ரணில் அரசாங்கம் பதைபதைத்தது. அதனாலேயே 'ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் மீளப் பிரதிஷ்டை செய்யப்படும்' என ஜனாதிபதி ரணில் அறிவிக்கும் நிலைகூட வந்தது. அப்படி ஜனாதிபதி உறுதியளித்த விடயத்தைக்கூட, ஒரு திணைக்களத்தால் தடுக்க முடிகின்றதென்றால், நிறைவேற்றதிகார ஜனாதிபதியைவிடவும், தொல்லியல் திணைக்களம் சர்வவல்லமை பொருந்தியதா? என்ற கேள்வியும் இங்கு எழாமலில்லை. மக்களின் எழுச்சியால் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்த்து, விடயத்தை மடைமாற்றம் செய்யவே ரணில் தன் அமைச்சர்களை வெடுக்குநாறிமலைக்கு அனுப்பிவைத்திருக்கிறார். ஆனால், அந்த அமைச்சர்களோ, பிரச்சினையை இன்னும் குழப்பியடித்துவிட்டு, தாங்கள் இந்த விடயத்தில் தலையிட முடியாதெனச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். போதாக்குறைக்கு 'குருந்தூர்மலையை இஸ்லாமியர்களும் உரிமை கோருகின்றனர்' என்ற புதிய பூதமொன்றையும் களமிறக்கியிருக்கிறார் அமைச்சர் ஜீவன் தொண்டமான். இப்படிப்பட்ட அமைச்சர்கள் தான் தங்களின் பிரச்சினைகளை அரசாங்கத்திடம் கொண்டுசென்று, நல்ல தீர்வைப் பெற்றுத்தருவார்கள் என்று நம்பும் ஒரு கூட்டமும் நம்மிடையே இருக்கிறது. வெடுக்குநாறிமலை விவகாரத்தில் இந்த அமைச்சர்கள் தலையிடாமல் இருந்திருந்தாலே நல்லதொரு தீர்வு கிடைத்திருக்கும். இப்போதோ எல்லாவற்றையும் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்துவிட்டு போயிருக்கிறார்கள் இந்த நந்தவனத்து ஆண்டிகள்.

### நாளொரு நல்வார்த்தை

கேள்விகளைக் கேட்பவன்
ஐந்து நிமிடம் முட்டாள்
கேள்வியே கேட்காதவன்
எப்போதுமே முட்டாள்

– கன்பூசியஸ்




# மன்னார் காற்றாலை தொடர்பில் மக்களுக்குத் தெளிவூட்டுங்கள்!

## எரிக் சொல்ஹெய்ம் அறிவுறுத்து

**மன்னார், ஏப். 3**

**மன்னாரில் அமைக்கப்படவுள்ள காற்றாலைகள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவூட்டப்படவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை தொடர்பான ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் நான் மன்னாருக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, மன்னாரில் அமைந்துள்ள மற்றும் அமைக்கப்படவுள்ள காற்றாலைகள் தொடர்பில் உள்ளூர் மக்கள் கவலைகளை வெளிப்படுத்தினார்கள். அவர்களுடைய கவலைகள் மற்றும் சந்தேகங்கள் தொடர்பில் உரிய பதில்கள் அளிக்கப்படவேண்டியது அவசியமாகின்றது. அவர்களுடனான கலந்துரையாடல்கள் சுமுகமாக முன்னெடுக்கப்பட்டு உரிய இடங்களில் காற்றாலைகள் அமைக்கப்படுவதே சிறந்த செயற்பாடு என்று நான் கருதுகின்றேன்.

இதேவேளை- இலங்கையைப் பொறுத்தவரையில் காற்றாலைகள் ஊடாக மின்சாரம் பெற்றுக்கொள்ளும் செயற்பாடானது சிறந்த வாய்ப்பாக அமையும், அத்துடன் சிறந்த வேலைவாய்ப்புக்களையும் உருவாக்குவதாக அமையும்.

அதுமட்டுமன்றி, குறித்த செயற்றிட்டமானது, சூழலுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தாத பூச்சிய நிலையைக் கொண்டதாகும். ஆகவே காற்றாலைகளின் பயன்களை உள்ளூர் மக்களும் உணர்ந்துகொள்வது அவசியமாகின்றது - என்றார். (ம)

# டெல்லி பறக்கிறார் ஜனாதிபதி ரணில்!

கொழும்பு, ஏப். 3

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் புதுடெல்லிக்குச் செல்லவுள்ளார். அநேகமாக எதிர்வரும் 5ஆம் அல்லது 6ஆம் திகதி அவர் தனது பயணத்தை மேற்கொள்ள வாய்ப்புள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணிலை இந்தியாவுக்கு வருமாறு இந்தியப் பிரதமர் மோடி வழங்கிய அழைப்பிதழை, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தனது இலங்கைப் பயணத்தின்போது ஜனாதிபதி ரணிலிடம் கொடுத்திருந்தார். இந்தப் பின்னணியிலேயே ரணிலின் இந்தியப் பயணம் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் தனது பயணத்தின் ஒரு பகுதியாக இந்தியப் பிரதமர் மோடியையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.


இந்தப் பயணத்தின்போது மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பிலும், 13ஆவது திருத்தம் தொடர்பிலும் ஆலோசிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

இன்று

**04.04.2023**
செவ்வாய்க்கிழமை
பங்குனி 21

சுபநேரம் : 10.40 – 12.10
ராகுகாலம் : 03.10 – 04.40

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய நிர்வாக சபையின் ஏற்பாட்டில், யோகர் சுவாமிகளின் 59 ஆவது ஆண்டு குருபூசை நிகழ்வு நேற்று சனிக்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் செ.பாலச்சந்திரன் "ஈழத்துச் சித்தர் யோகர் சுவாமிகளின் சிறப்புக்கள்" எனும் தலைப்பில் சிறப்புச்சொற்பொழிவை ஆற்றினார். (அ-14-66)



பிறக்கவிருக்கும் தமிழ் சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு சனி மாற்றத்துக்கான மஹாயாக உற்சவம் வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். உடுவில் மருதனார்மட சுந்த ஆஞ்சநேயர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது.

ஆலய பிரதம குரு ஸ்ரீ.செ.சுந்தரரேஷக்குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்களால் நடைபெற்ற இந்த உற்சவ கிரியைகளில் விஷேட யாக, ஹோமம் வளர்க்கப்பட்டு அபிஷேக, ஆராதனைகள் இடம்பெற்றன. (அ-ய-27)



சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தலும் விற்பனையும் பிரதேச செயலக வளாகத்தில் கடந்த 29ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது. (அ-ய-9)

# கால்கோள் விழா



சாவகச்சேரி - மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களுக்கான கால்கோள் விழா கடந்த 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (அ-ய-9)



போக்கட்டி அ.த.க. பாடசாலையில் தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களுக்கான கால்கோள் விழா கடந்த 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (அ-ய-159)



கைதடி குருசாமி வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களுக்கான கால்கோள் விழா கடந்த 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (அ-ய-159)



மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களுக்கான கால்கோள் விழா கடந்த 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் இரண்டும், மடிக்கணினி ஒன்றும், புத்தகப் பொதிகள் மற்றும் 5 மாணவர்களுக்கு மாதாந்த உதவிக் கொடுப்பனவு ஆகியன வழங்கப்பட்டன. (அ-ய-159)



கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களுக்கான கால்கோள் விழா கடந்த 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (அ-ய-159)



சாவகச்சேரி தனங்களப்பு அ.த.க.பாடசாலையில் கால்கோள் விழா கடந்த 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (அ-ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சோமசுந்தரம் கனகாம்பிகை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தோற்றம் 10.12.1945

மறைவு 02.04.2023

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கனகாம்பிகை கனடாவில் நேற்று (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மயிலாம்பிகை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான ஆசிரியர் நடராசா சாரதாதேவி (முன்னாள் ஊழியர். யா/ மாநகரசபை). சுசிலாதேவி (முன்னாள் ஊழியர். சுகாதாரத்திணைக்களம்) மற்றும் மோனகதாஸ் (கனடா). குகனேஸ்அம்மா (நல்லூர்). ராகினி. தேவராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மதுசாளினி. திபாகரி (கனடா). பிரபாகரி (கனடா). வன்மீகநாதன் (கனடா). மாலதி (அனலைதீவு) ஆகியோரின் பாசமிகு அக்காவும். கஜலக்சி. பிரதச்சனா. கிரிசாந் ஆகியோரின் ஆசை பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைரும் ஏற்றுக்கொள்ளவும்.

**107, நாயன்மார் வீதி, நல்லூர்.**

**076 691 0261 (T.ராகினி)**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 24272) (K-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 - 04 - 1945

மறைவு 31 - 03 - 2023



## சிவஞானமூர்த்தி சிதம்பரராணி

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணி. பண்டாரவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானமூர்த்தி சிதம்பரராணி அவர்கள் கடந்த (31.03.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (தர்மலிங்கம்) - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான இராசையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற சிவஞானமூர்த்தி (ஓய்வு பெற்ற படவரைஞர். பிரபல வர்த்தகர். பண்டாரவளை) அவர்களின் பாசமிகு மனைவியும். காலஞ்சென்றவர்களான தனேஸ்வரி. ஞானேஸ்வரி. சிதம்பரநாதன் மற்றும் யோகராணி. சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும். Dr. கணேசமூர்த்தி. கனகரத்தினம் (கனடா). சண்முகநாதன் (ஜெய்ப்பூர். யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனியும். செல்வதி. பாலமயூரன் (பொறியியலாளர். அவுஸ்ரேலியா). மயூரா (பொறியியலாளர். அவுஸ்ரேலியா). சிவமயூரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர். மாவட்டச் செயலகம். முல்லைத்தீவு). சிவசீலன் (கணிய அளவையாளர். ஓமான்). சிவபாலன் (கணக்குப் பதிவாளர். யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். மாலினி (சிரேஷ்ட விரிவுரையாளர். பேராதனைப் பல்கலைக்கழகம்). புஸ்பகுமார் (கணிய அளவையாளர் அவுஸ்ரேலியா). வினோஜா. திவ்யா (கணிய அளவையாளர். அபிவிருத்தி அதிகாரசபை, கண்டி). சிவகௌரி (வேலை மேற்பார்வையாளர் கட்டடத் திணைக்களம். யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும். சாயிசங்கீத் (உதவி முகாமையாளர். ஜெட்லிங் லேக். தம்புள்ளை) ஆருஜன். அக்ஷான். சாயி நிஷா. ஸ்ரீஷா. சிவானுஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2023) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"தர்மபவனம்" சித்தன்கேணி.**

(CS 24270)(K-1)

**தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

## காதலிக்க ஒரு வாரம்

கல்லூரி மாணவர்கள் காதலிப்பதற்காக சீனா ஒரு வாரம் விடுமுறை அளித்துள்ளது. சீனாவில் சடுதியாக பிறப்பு விகிதம் சரிவடைந்து வரும் நிலையிலேயே கல்லூரிகள் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பிறப்பு விகிதத்தை அதிகரிக்கும் வகை யில் அரசியல் ஆலோசகர்கள் பல்வேறு பரிந்து ரைகளை அரசுக்கு முன்வைத்துள்ளனர்.

இந்த நிலையில் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் தனித்துவமான இந்த முயற்சியில் களமிறங்கியுள்ளன. அந்தவகையில் சீனாவின் பிரபலமான 9 கல் லூரிகள் ஒரு வார காலம் விடுமுறை அளித்து மாண வர்களை காதலிக்க ஊக்குவித்துள்ளன. (ச-இ)


## வீடு வாடகைக்கு விடப்படும்

அச்சுவேலி நவக்கிரியில்
சகல வசதிகளுடன் கூடிய
இரண்டு அறைகளையுடைய
புதிய வீடு வாடகைக்கு
விடப்படும்.

தொடர்புகொள்ளும் நேரம் :
இரவு 8.00 மணிக்குப்பிறகு

**021 223 2976**

(cs 24104) (N-1)


## யாழ்பாடி சதுரங்க சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ்ப்பாணப் பிரதேச செயலக நலன்புரிசங்கம் நடத்தும் 'யாழ்பாடி சதுரங்கச் சுற்றுப்போட்டி' எதிர்வரும் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

6,8,10,12 வயதுப் பிரிவினருக்கான போட்டியானது வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் 14,16 வயதுக்குட்பட்டவர்கள் மற்றும் 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டி வண். நாவலர் மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை பாடசாலைகளில் அல்லது யாழ். பிரதேச செயலக முகநூல் பக்கத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினர் கோரியுள்ளனர். (ஒ.ரி1)

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் முகாமையாளராக கடமையாற்றிய

**கனகசுந்தரம் துரைராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

**கோபி ஆடையகம்**

**உரிமையாளரும், பணியாளர்களும்**

(cs 24273) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 • 05 • 1938

மறைவு 30 • 03 • 2023



## செல்லத்துரை சிவக்ஞானம்

(ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி - கோண்டாவில் டிப்போ)

ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவர் செல்லத்துரை சிவக்ஞானம் அவர்கள் கடந்த (30.03.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், தனுஷா, யாமினி, பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகேஸ்வரன், சுபாஜினி, காலஞ்சென்ற விகிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தேனுகா, தேசிகா, கிரித்திகன், தரணிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 18/1, ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

(cs24266) (N-1)

**தகவல்: குடும்பத்தினர் 076 325 0603**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேர்த்திருவிழா

மூளாய், ஏப். 3

மூளாய் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம் பெற்று சுவாமி உள்வீதி வலம் வந்து தேரில் ஆரோகணிப்பார்.

மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவம் இடம் பெறும் என ஆலய தர்ம கர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (ஒ)

# போலிச் செய்தியைத் தயாரித்து எதிர்க்கட்சிகள் மீது சேறுபூசல்

## சஜித் ஆக்ரோஷம்

கொழும்பு, ஏப். 3

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்தின் பக்கமாகச் செல்லவுள்ளனர் என்று போலிச் செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. சலுகைகளுக்காகவோ வரப்பிரசாதங்களுக்காகவோ தங்கள் சுயமரியாதையை ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இழக்கமாட்டார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சஜித் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் அரசிடம் செல்வதாக போலிச் செய்திகளை வெளியிட்டு ஐக்கிய மக்கள் சக்தியை பிளவுபடுத்தும் தந்திர செயற்பாடுகளை ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ளார்.

சில ஊடக நிறுவனங்களின் பெயர்கள் இதற்கு சட்டத்துக்குப் புறம்பான வகையில் பயன்படுத்தப்படுகின்றன.

எதிர்க்கட்சியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 20 கோடி ரூபா பேரம் பேசப்படுகிறது. இதற்கு கறுப்புப் பணமும் பண்டோரா பணமும் பயன்படுத்தப்படுகிறது. நாம் விழிப்புடன் செயற்படவேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருபோதும் பணத்துக்காகத் தமது சுயமரியாதையை தாரைவார்க்கமாட்டார்கள். சலுகைகளுக்காகவோ வரப்பிரசாதங்களுக்காகவோ தங்கள் சுயமரியாதையை இழக்கமாட்டார்கள் - என்றார். (ச-22)

## 'உதயனின்' பெயரை வைத்து போலிப்பரப்புரை முன்னெடுப்பு

சமூக வலைத்தளங்களில் 'உதயனின்' பெயரை வைத்து போலிப் பரப்புரைகள் இடம்பெற்று வருகின்றன என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கொழும்பு அரசியல் வட்டாரங்களுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட தகவல்களை மக்கள் மத்தியில் கொண்டு சென்று சேர்ப்பதற்காகவும், அவற்றின் மீது நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதற்காகவும் உதயனின் பக்க வடிவமைப்பை ஒத்த வடிவமைப்பும், இலச்சினையும், பெயரும் இவ்வாறு சட்டத்துக்குப் புறம்பான வகையில் பயன்படுத்தப்படுகின்றன.

இதன்படி, அண்மைக்காலமாக சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி செயற்படுவது போன்றதான தகவல்களும், உதயனின் பெயரையும் உதயனுக்கே உரித்தான இதர அம்சங்களையும் கொண்டு பரப்புரை செய்யப் படுகின்றன. இதுதொடர்பில் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவிலும் ஐக்கிய மக்கள் சக்தியால் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறான போலிச்செய்திகளுக்கும் உதயனுக்குத் தொடர்பில்லை என்பதுடன், அந்தச் செய்திகளுக்கு உதயன் பொறுப்பேற்கமாட்டான் என்றும் இது தொடர்பில் விழிப்புடன்

இருக்குமாறும் தன் வாசகர்களுக்கு உதயன் அறிவுறுத்துகின்றான்.

(ஆ-ர்)


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின்

புதிய அதிபரைப்

பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு. சிவபாலன் இந்திரகுமார்

அவர்களே!

சரித்திரம் படைத்திட்ட

சாதனைச் செயல் வீரனே!

சமத்துவ நோக்கும்

சமூக சேவையுமுடைய வள்ளலே!

வாழ்க! வளர்க நும் பணி

வாழ்த்துவோர்:


யாழ். மாவட்ட நண்பர்கள்,

பெற்றோர்கள்

(CS 24255)(K-1)


# மரண அறிவித்தல்

## கனகசுந்தரம் துரைராஜா



தோற்றம் 12.03.1942 — மறைவு 01.04.2023

யாழ்.மனோகராச் சந்தியைப பிறப்பிடமாகவும் கைதடி-நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் துரைராஜா நேற்று முன்தினம் (01.04.2023) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் நகுலேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் நல்லம்மா தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சோதிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்றவர்களான பூலோகராஜா, வில்வராஜா, சேனாதிராஜா மற்றும் பற்குணராஜா, இந்திராணி, ஜெயராணி, பொன்ராஜா காலஞ்சென்ற யோகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் ஜெயக்குமார், அருந்ததி, சர்மிளா, சோபனா, சுஜிதா (கனடா) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், வரதலட்சுமி, குணராசா, சிவகுமார், ஜசிந்தன், கமலராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரோசன்- யசோதரா, நிதுஷா- சுரேந்தர், நிக்ஷன், காஞ்சிகன், சாயத்திரி- நிசோதரன், துவாரகன், ஷாகித்தியன், பானுசன், பிரவிந்தன், அபியுகன், திலக்ஷனா, சுவீனன், வருஷ்னிகா, நிதீஸ், அஜய்(கனடா), சஜீவ்(கனடா), ரிசான்(கனடா), ஜஷ்மிகா(கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், தக்ஷரா, ஆருதி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

குடும்பத்தினர்.

077 534 3812

(CS24276)(J-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈர விழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் நடராசா சிவகாமிப்பிள்ளை
## (பருத்துறை மாமி)

**தோற்றம்**
**20.09.1931**

**மறைவு**
**03.04.2021**

ஈராண்டு நகர்ந்தாலும் - நம்மை
விட்டு அகலாது உங்கள் முகம்
ஓவியமாய் பதிந்திருக்கிறது - உங்கள்
வண்ண முகம்
நினைவுகள் வருகையில் நிலை குலைந்து
போகின்றோம் அம்மா
நினைக்காத நொடியில்லை - அம்மா
காலமெல்லாம் நிலைத்திருப்போம் - அம்மாச்சி
தேடி நாம் உருகுகின்றோம் - உங்களை
அன்பினால் பண்பினால் அரவணைப்பினால்
எங்கள் அனைவரது
உள்ளங்களில் குடியிருக்கும்
எம் அன்னையை நாம்
என்றென்றும் நினைத்திருப்போம்
ஆண்டவன் காலடியில் உங்கள் ஆத்மா சாந்தி
அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**

**வளர்மதி யோகலிங்கம்**
**(மகள்)**

57/1 ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
077 329 7364

(CS 24265) (K-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிபுரிந்த கடையில் 'கைவைத்த' இளைஞன்

வவுனியா, ஏப். 3

வவுனியா, இலுப்பையடிப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையத்திலிருந்து 12 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டமை தொடர்பில், வர்த்தக நிலையத்தில் பணியாற்றிய நீலிமோட்டையைச் சேர்ந்த 20 வயது இளைஞனை சந்தேகத்தில் நேற்றுக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரபல பல்பொருள் விற்பனை நிலையத்தில் வங்கியில் வைப்புச் செய்வதற்காகத் தயார் செய்து வைக்கப்பட்டிருந்த 12 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக விற்பனை நிலைய உரிமையாளரால் கடந்த புதன்கிழமை வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

விசாரணைகளின் அடிப்படையில் வர்த்தக நிலையத்தில் கடமையாற்றி கொழும்பு சென்றிருந்த இளைஞனைப் பொலிஸார் சூட்சுமமான முறையில் வவுனியாவுக்கு வரவழைத்து வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்துக் கைதுசெய்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது 9 இலட்சம் ரூபா வங்கியில் உள்ளதாகவும், மிகுதி 3 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவு செய்து விட்டதாகவும் தெரிவித்ததாக பொலிஸார் கூறினர். (அ-ஒ.18,110)

# கிளர்ச்சியாளர்களின் வெறியாட்டத்தை ஒடுக்கவே பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்

## ஜனாதிபதி ரணில் வெளிப்படை

கொழும்பு, ஏப். 3

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு ஊடாக மக்களை அடக்குவது அரசின் நோக்கம் அல்ல. ஆனால், கிளர்ச்சியாளர்கள் வெறியாட்டம் போட நாம் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்குப் பல தரப்பிலிருந்தும் எதிர்ப்பு வெளியிடப்படுவது தொடர்பில் ஜனாதிபதியிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு இம்மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சட்டவரைவு சபையில் முன்வைக்கப்படுவதற்கு முன்னரே அது பேராபத்து என்று எதிர்க்கட்சியினரும் அவர்களின் ஆதரவாளர்களும் துள்ளிக் குதிக்கின்றனர்.

முதலில் சட்டவரைவு முன்வைக்கப்பட்ட பின்னர் அதிலுள்ள பரிந்துரைகளைப் பார்க்கவேண்டும். அதன் பின்னர் விமர்சனங்களை முன்வைக்கவேண்டும்.

இது சர்வாதிகார அரசு அல்ல. நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னர்தான் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்படும்.

இதன் ஊடாக மக்களை அடக்குவது அரசின் நோக்கம் அல்ல. ஆனால், கிளர்ச்சியாளர்கள் வெறியாட்டம் போட நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். நாட்டின் தேசிய பாதுகாப்பு மிக முக்கியமானது. அதைக் கேள்விக்குட்படுத்தும் வகையில் செயற்பட எவருக்கும் அனுமதி இல்லை - என்றார். (அ-ஒ.22)

# ஆலய விடயங்களைக் கையாள சட்டநிபுணர் குழு அமைப்பு

வெடுக்குநாறிமலை, குருந்தூர்மலை ஆதிசிவன் கோவில்கள் மற்றும் கன்னியா வெந்நீரூற்று விவகாரங்கள் தொடர்பில் அரசின் சட்டமீறல்களை எதிர்கொள்வதற்காக தமிழ் சைவப் பேரவையின் தலைவரும் முன்னாள் நீதிபதியுமான வசந்தசேனன் தலைமையில் சட்டநிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குகளுடன் தொடர்புடைய ஆலய நிர்வாகங்கள் மற்றும் சட்டத்தரணிகளுடன் தொடர்பிலுள்ளவர்கள் மேலதிக தகவல்களை பெற்றுத் தருமாறு தமிழ் சைவப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை, தன்னார்வலர்களாக மேற்படி சட்ட நிபுணர் குழுவில் இணைய விரும்பும் முன்னாள் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளை வரவேற்பதாகவும் அதன் நிர்வாகச் செயலர் தெரிவித்துள்ளார். (அ-ஒ.7)

# எரிகாயங்களுடன் சடலம் மீட்பு

துப்புரவு செய்யப்பட்ட காணியின் குப்பையை எரித்த 73 வயது முதியவர் ஒருவர் புகைக்குள் அகப்பட்டு மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இவரது சடலம் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில்பளைப்பொலிஸாரால்மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று பெரியபளையில் இடம் பெற்றுள்ளது

அதேயிடத்தைச் சேர்ந்த முருகேசு என்னும் முதியவர் புற்கள் நிறைந்து காணப்பட்ட காணியை நேற்றுமுன்தினம் துப்புரவு செய்து சுற்றிவர குப்பையை குவித்து எரித்துள்ளார். அங்கு எழுந்த புகைக்குள் சிக்கிய முதியவர் வெளியேற முடியாமல் வீழ்ந்துள்ளார். இரவாகியும் வீடு திரும்பாததால் அவரைத் தேடிய உறவினர்கள் காலையில் காணிக்குச் சென்று பார்த்தபோது எரிகாயங்களுடன் சடலமாக காணப்பட்டுள்ளார். அவரது சடலத்தை மீட்ட பொலிஸார் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். (அ-ஒ.9)

# கதவு திறந்தே உள்ளது எவரும் இணையலாம்!!!

## ஜனாதிபதி ரணில் சூசகம்

அரசின் கதவு எந்நேரமும் திறந்தேயுள்ளது. அரசுடன் எவரும் இணையலாம் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'கட்சி அரசியலுக்கு அப்பால் நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி செயற்பட விரும்பும் எதிர்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணையலாம். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நாம் நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களுக்கிடையில் ஒற்றுமை மிகவும் அவசியம். இது கட்சியை வளர்க்கும் நேரமல்ல. நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் நேரம். எனவே, எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து நாட்டுக்காகச் செயற்படவேண்டும். கடந்த காலங்களில் நடந்ததுபோல் கோடி ரூபா, அமைச்சுப் பதவிகள், சலுகைகள் வழங்கி எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களை இந்த அரசு விலைக்கு வாங்கமாட்டாது'- என்றார். (அ-ஒ.22)

### 'மலையில்...

தொல்லியல்திணைக்களத்திடம் ஆவணத்தை எடுத்த பின்னர் அதைப் பார்க்கலாம் என்று சிறு பிள்ளைகளை ஏமாற்றுவது போல் எமக்குக் கூறிச்சென்றனர். இனி இவர்களை நம்பிப் பலனில்லை. அடுத்தகட்டம் தொடர்பில் ஆலய நிர்வாகமே முடிவெடுக்கும் - இவ்வாறு வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் அறங்காவலர் பூபாலசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது ஆலயம் இடித்தழிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இன்று (நேற்று) அதிகாலை விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. எனினும் நேற்றுமுன்தினம் மாலை குறித்த பணிகளைச் செய்த மூவர் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். இன்று அமைச்சர்களின் பிரசன்னத்துடன் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்படும் என எமக்குத் தெரிவித்திருந்தனர். ஆனால், அது நடைபெறவில்லை. அது எமக்கு மிகுந்த கவலையளிக்கின்றது.

2018 ஆம் ஆண்டு தொல்பொருள் திணைக்களம் தலையிடும்வரை இந்த ஆலயத்தில் பொதுமக்கள் சுதந்திரமாக தமது வழிபாடுகளை முன்னெடுத்திருந்தனர். இந்த ஆலயவளாகம் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தாத ஓர் இடமாகவே இருக்கின்றது. இவ்விருக்கையில், இந்து ஆலயங்களை அழிப்பதற்காகவே தொல்பொருள் திணைக்களம் உருவாக்கப்பட்டுள்ளதாக நாங்கள் கருத வேண்டியுள்ளது.

குருந்தூர்மலையில் நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறி விகாரை கட்டப்படுகின்றது. அதை எந்தச் சட்டமும் தண்டிக்கவில்லை. ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்குள் செல்லவேண்டாம் என்று நீதிமன்றம் எமக்கு இதுவரை உத்தரவு போடவில்லை. தொல்லியல் திணைக்களமும் பொலிஸாருமே அதற்குத் தடையை ஏற்படுத்துகின்றனர்.

எம்மை உள்ளே விடமால் செய்துவிட்டு, தற்போது யார் உடைத்தது என்று எங்களைப் பார்த்து அவர்கள் கேட்கின்றனர்? மதவெறி பிடித்தவர்களால் எமது இந்து ஆலயங்கள் சீண்டப்படுகின்றன. நாம் ஏமாற்றம் அடைந்துள்ளோம். இந்த நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பே இல்லை என்று நாம் கருதுகின்றோம். இலங்கை ஒரு சிவபூமி. எனவே இந்தச் செயற்பாடு ஒரு அழிவுக்கான ஆரம்பமே.

அமைச்சர்கள் ஏப்ரல் 10ஆம் திகதி வரையில் பொறுக்குமாறு கேட்டனர். ஆறிய கஞ்சி பழம் கஞ்சியே - என்றார் பூபாலசிங்கம். (அ-ஒ,110)

### மோ. சைக்கிள்...

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டன. இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இருவர்காயங்களுடன்மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு, 9 ஆம் வட்டாரம் மல்லிகைத்தீவைச் சேர்ந்த கி.ஜெமில்ராஜ் (வயது - 36) என்பவரே உயிரிழந்தவராவார். (அ-ஒ,19)

### யாழில்...

என்று 3 பேர் யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உரும்பிராய் பிரதேசத்தில் காரை வாடகைக்கு கொடுப்பவரிடம் ஒரு மாதத்துக்கு முன்னர் காரை வாடகைக்குப் பெற்றுள்ளனர். அதற்காக ஒரு இலட்சம் ரூபா முற்பணம் கொடுத்துள்ளனர். காரை கொண்டு சென்ற சில நாள்களின் பின்னர் காரிலிருந்து ஜி.பி.எஸ். கருவி அகற்றப்பட்டுள்ளது. அத்துடன் வாடகைக்கு எடுத்துச் சென்றவர்களும் தொடர்பைத் துண்டித்துள்ளனர்.

இதனையடுத்து காரின் உரிமையாளர் யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார். அவர்கள் அது தொடர்பில் விசாரணை முன்னெடுத்து வந்தனர். இந்த நிலையில் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீடொன்றில் மேற்படி கார் கண்டுபிடிக்கப்பட்டது.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், தம்மிடம் வாங்கிய 65 இலட்சம் ரூபா கடன் பணத்துக்கு இந்தக் காரை ஈடு வைத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

இதனையடுத்து காரை வாடகைக்கு பெற்றுச் சென்றவர், அதற்குச் சாரதியாகச் செயற்பட்டவர் மற்றும் ஈடு வைப்பதற்கு உதவிய (கடன் வழங்கியவரின் உறவினர்) ஆகியோரை பொலிஸார் கைது செய்தனர். (அ-ஒ,26)

### விக்கிரகங்களை...

உறுதியளித்திருந்த அமைச்சர்கள், நீதிமன்றில் வழக்கு இருப்பதால் அது தொடர்பாகப் பின்னர் தீர்மானிப்போம் என்று நேற்று 'பல்டி' அடித்தனர்.

அமைச்சர்களான ஜீவன் தொண்டமான் மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமையிலான குழுவினர் வெடுக்குநாறிமலையின் அடிவாரத்துக்கு நேற்றுச் சென்றனர். அவர்கள் ஆலயம் மேலே இருந்த பகுதிக்குக்கூடச் செல்லவில்லை.

ஆலய நிர்வாகத்தினர் அமைச்சர்களின் பங்கேற்புடன் விக்கிரகங்களை மீளப்பிரதிஷ்டை செய்யமுடியும் என்ற நம்பிக்கையிலிருந்தனர். அங்கு சென்ற அமைச்சர்கள், நீதிமன்றில் வழக்கு இருப்பதால் அது முடிவடைந்த பின்னர் பிரதிஷ்டை செய்யலாம் என்று கூறி தமது சுற்றுலாவை முடித்துக்கொண்டு திரும்பினர். 'பிரதிஷ்டை செய்வோம் என்று கூறும் போது நீதிமன்றில் வழக்கு இருப்பது தெரியாதா?' என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர்கள் பதிலளிக்கவில்லை. (அ-ஒ,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்...

கானான் ஜெப ஆலயத்தின் மாணவர் விடுதியிலிருந்து கடந்த 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 3 சிறுமிகள் தப்பித்துச்சென்றுள்ளனர். விடுதியிலிருந்து வெளியேறிய மாணவிகள், அருகிலிருந்த முச்சக்கரவண்டிச் சாரதிகளிடம் பணத்தைப்பெற்றுக்கொண்டு பேருந்தில் ஏறிச் சென்றுள்ளனர். இதை அறிந்த விடுதி நிர்வாகம் பேருந்துச் சாரதியைத் தொடர்புகொண்டு சிறுமிகள் மூவரையும் முகமாலையில் இறக்கி திருப்பி அழைத்து வந்துள்ளனர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு சிறுவர் நீதி மன்றில் கடந்த வெள்ளிக்கிழமை வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தப்பியோடியவர்களில் இரு சிறுமிகள் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் மற்றைய சிறுமி வேறு ஒரு சிறுவர் இல்லத்தில் தங்கவைக்கப்பட்டார். இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு சிறுவர் நீதிமன்றம் பணித்ததைத் தொடர்ந்து சிறுவர் நன்னடத்தை திணைக்கள அதிகாரிகள், கோப்பாய் பொலிஸார் நேற்றுமுன்தினம் கானான் ஆலயத்துக்குச் சென்று ஆராய்ந்தனர். அது தொடர்பிலான அறிக்கை சிறுவர் நீதிமன்ற நீதிவானிடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சிறுவர் இல்லத்திலிருந்த 13 சிறுமிகளையும், தப்பியோடிய 3 சிறுமிகளில் மற்றோர் சிறுவர் இல்லத்தில் தங்க வைக்கப்பட்ட சிறுமியுமாக 8 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட 14 பேரையும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்துமாறு பணித்துள்ளார்.

சிறுமிகளிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, விசாரணை இடம்பெற்றால் சிறுமிகள் எவ்வாறு பதிலளிக்கவேண்டும் என்பது தொடர்பிலும் அவர்களுக்கு நிர்வாகம் சொல்லிக்கொடுத்த விடயமும் விசாரணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி விடுதியில் சேர்ப்பதற்கு முன்னர் சில சிறுமிகள் கட்டாயமாக மதமாற்றத்துக்குட்படுத்தப்பட்டுள்ளனர். சிலர் விடுதியில் சேர்க்கப்பட்ட பின்னர் மத மாற்றப்பட்டுள்ளனர். அவர்களது பெற்றோரும் மதமாற்றப்பட்டுள்ளனர்.

அதிகாலை 4 மணிக்கு விடுதியின் அருட்சகோதரிகளே தம்மை வந்து எழுப்புவதாகவும், நித்திரையால் எழும்பாமல் இருந்தால் நகத்தால் நுள்ளி எழுப்புவதாகவும் சிறுமிகள் தெரிவித்துள்ளனர். அது தொடர்பான காயங்கள் மருத்துவப் பரிசோதனையில்கண்டறியப்பட்டுள்ளது. அதிகாலை 4 மணியிலிருந்து 6 மணி வரையில் வழிபாடு இடம்பெறும் என்றும் அதன் பின்னர் பாடசாலை செல்லும் வரையில் அங்குள்ள முற்றத்தை கூட்டுவது உள்ளிட்ட வீட்டுப் பணிகளை மேற்கொள்ள பணிக்கப்பட்டதாகவும் சிறுமிகள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலைமுடிந்துவந்தபின்னர்டைபிளை பாடமாக்க தருவதாகவும் அதன் பின்னர் சிறிது நேரம் நித்திரை கொள்வதற்கு அனுமதிப்பதாகவும் சிறுமிகள் குறிப்பிட்டுள்ளனர். மாலை 5 மணிக்கு தோட்ட வேலைகளை செய்யப்பணிப்பதாகவும் தெரிவித்துள்ளனர். அங்குள்ள அருட்தந்தையரின் வளர்ப்பு நாய்களுடன் விளையாடவேண்டும் என்றும் சிறுமிகள் விசாரணைகளின்போது குறிப்பிட்டுள்ளனர். இரவு 6.30 மணியிலிருந்து 10 மணி வரை வழிபாட்டில் கட்டாயம் பங்கேற்கவேண்டும் என்று பணிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளனர். அதேவேளை தினமும் தமக்கு விற்றமின் சி மற்றும் டி குளிசைகள் வழங்கப்படுவதாகவும் சிறுமிகள் விசாரணையில் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை - மேற்படி இடத்தில் முன்பு சிறுவர் இல்லம் ஒன்று இயங்கி வந்து பின்னர் மூடப்பட்டிருந்தது. இந்த நிலையில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சராக த.குருகுலராஜா இருந்த காலப் பகுதியில் மாணவர் விடுதியாக இயங்குவதற்கான அனுமதி வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலையுடன் இல்லாத இவ்வாறான தொரு விடுதிக்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கமுடியாது என்றும் ஆகக் குறைந்தது இவ்வாறானதொரு அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பில் யாழ். மாவட்டச் செயலகத்துக்கோ, கோப்பாய் பிரதேச செயலகத்துக்கோ, சிறுவர் நன்னடத்தை திணைக்களத்துக்கோ தெரியப்படுத்தப்படவில்லை என்றும் துறைசார் அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

மாணவர் விடுதிக்கான அனுமதி வழங்கிய கடிதத்தில், விடுதி மாணவர்களின் பிரதான நோக்கம் கற்றல் செயற்பாடு எனவும் அதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அதற்கான போதிய காலம் ( மாலை 6.00 - 8.30 மணி ) வழங்கப்படுவதோடு மாணவர்களின் உடல் உளநலனை கருத்தில் கொண்டு இரவு 9.00 - 9.30 மணிக்குள் நித்திரைக்குச் செல்வதை உறுதிப்படுத்தல்வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் இவ் விடுதி வடமாகாண எல்லைக்குட்பட்டதால் வடமாகாண மாவட்டங்களுக்குரிய மாணவர்களையே விடுதிக்கு அனுமதிக்கமுடியும் என்றும் நிபந்தனையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

கல்வி அமைச்சு வழங்கிய அறிவுறுத்தல்களையும் மீறியே மேற்படி மாணவர் விடுதி இயங்கியுள்ள நிலையில் இதற்குப் பொறுப்பானர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு நேற்று இரவு அழைக்கப்பட்டு அவர்களிடம் வாக்கு மூலம் பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.5,26,125)

## குருந்தூர்...

வவுனியா வெடுக்குநாறி மலைக்கு நேற்றுக்காலை சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆலய விடயத்தில் நீதிமன்ற உத்தரவு இருப்பதால் அதனை மீறி நாம் செயற்படமுடியாது. தொடர்ச்சியாக இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து அதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்வோம்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பல கோவில்களுக்கு ஆவணங்கள் இல்லாத நிலை இருக்கிறது. இது ஒரு குறைபாடு. இதற்கு உரிய திணைக்களம் ஒத்துழைக்காமையும் ஒரு காரணம். இது தொடர்பாக ஜனாதிபதியிடம் பேசி ஆவணத்தைப் பெற்று இந்தக் கோவிலை மக்கள் கையில் ஒப்படைப்பதே எமது நோக்கம். இந்து என்ற ரீதியில் நான் இங்கு வரவில்லை. இலங்கையர் என்ற அடிப்படையிலேயே நாம் வந்தோம். தலதாமாளிகைக்கும் நாங்கள் உதவி வழங்கியுள்ளோம். பள்ளிகளுக்கும் வழங்கியுள்ளோம்.

குருந்தூர் மலையைப் பொறுத்தவரை இஸ்லாமியர்களும் சொந்தம் கொண்டாடுகின்றார்கள். சிங்களவர்களும், தமிழர்களும் சொந்தம் கொண்டாடுகின்றார்கள். அதன் [illegible] கள் தயாரிக்கப்ப[illegible] காரணமாகவுள்ளது. இவற்றைச் சீர் செய்வதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவை - என்றார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன், இ.தொ.கா.வின் தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல், நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள், பாபு சர்மா உட்பட பலர் அங்கு சென்றிருந்தனர். (அ-ஒ,44,110)

## போதிய...

காமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டை அடுத்து குறைந்த வரவு வீதமுள்ள மாணவர்களையும் பரீட்சைக்கு அனுமதிப்பது தொடர்பில் ஆராய்வதற்கென விசேட பீடச்சபைக் கூட்டத்தை இன்று மாலை 4 மணிக்கு கூட்டுவதற்கு விஞ்ஞான பீடாதிபதி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக கூட்டங்களில் பங்கேற்பதை விரிவுரையாளர்கள் பகிஷ்கரித்து வருகின்ற போதிலும் மாணவர்களைப் பரீட்சைக்கு அனுமதிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக நடத்தப்படும் பீடச்சபைக் கூட்டத்தை நடத்துவதற்கும், அந்தக் கூட்டத்தில் விரிவுரையாளர்கள் கலந்துகொள்வதற்கும் ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் அனுமதி வழங்கியுள்ளது.

விஞ்ஞான பீடத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான நியமங்களின் படி விரிவுரைகளுக்கு 80 சதவீத வரவு இல்லாத மாணவர்களைப் பரீட்சைக்கு அனுமதிப்பதில்லை. விசேட மற்றும் மருத்துவக் காரணங்களுக்காக வரவின்மையை உறுதிப்படுத்தி பீடச்சபையிடம் மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்கும் மாணவர்களுக்கு மட்டும் பீடச்சபையின் பரிந்துரையுடன், மூதவையால் விசேட அனுமதி வழங்கப்படுவது வழமையாகும்.

இருப்பினும், தற்போதைய பொருளாதார இடர்களின் மத்தியில் மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்துக் கட்டண உயர்வு காரணமாக வரவுத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாத ஒரு சில மாணவர்கள் பீடாதிபதியிடம் கோரிக்கை விடுத்தபோதிலும் அதனைக் கருத்திற் கொள்ளாமல், பாரபட்சமான முறையில் வேறு மாணவர்களைப் பரீட்சை எழுத அனுமதித்துள்ளதுடன், தங்களை அனுமதிக்காமை அடிப்படை மனித உரிமை மீறலாகுமெனக்கூறி யாழ்ப்பாணத்திலுள்ள மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். இதனையடுத்து இது தொடர்பில் உடனடியாக விளக்கமளிக்குமாறு விஞ்ஞான பீடாதிபதியை, மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் கேட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்த விஞ்ஞான பீடாதிபதி வரவின்மை தொடர்பில் பீடச்சபையின் பரிந்துரையின் அடிப்படையில் மூதவை மட்டுமே தீர்மானிக்கமுடியும் என்றும், உடனடியாக பீடச்சபையைக் கூட்டி முடிவெடுக்கப்படும் என்று அறிவித்துள்ளார். (அ-ஒ.5)

## புல்மோட்டையில்...

என்ற மலைப் பகுதியிலும் அந்த மலையை அண்டிய முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளையும் உள்ளடக்கி புத்தர் சிலைகள் நிறுவி விகாரை அமைக்கும் பிக்குகளின் நடடிக்கைகளுக்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியதை அடுத்து தேரர்களுடன் வருகைதந்த குழுவினர் போராட்டம் மேற்கொண்ட மக்களை கைத்துப்பாக்கியைக் கொண்டு சுட முயற்சி செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

புல்மோட்டை முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் செறிந்து வாழும், தொழில் செய்துவரும் பகுதிகளான தேத்தாவாடி தீவு, பொன்மலைக்குடா, அரிசி மலை, ஷபா நகர் ஆகிய கிராமங்களுக்கு நடுவே பொன்மலைக்குடா உள்ளது. பொன்மலைப் பகுதியில் முஸ்லிம் மற்றும் தமிழ் மீனவர்களின் வாடிகள் உள்ளன.

இந்தப் பகுதியிலேயே புத்தர் சிலை அமைத்து காணிகளைக் கையகப்படுத்தும் முயற்சிக்காக புல்மோட்டை அரிசி மலை பிக்குவான பனாமுரே திலகவங்ச மற்றும் இராணுவத்தினர் தொல்லியல் துறையினர் அடங்கிய குழுவினர் கடந்த 30ஆம் திகதி அங்கு வருகைதந்துள்ளனர். அந்த முயற்சிக்கு மக்கள் அன்றையதினமே எதிர்ப்பை வெளிப்படுத்தியதையடுத்து நேற்றுமுன்தினம் பிக்கு மற்றும் அவரது சகாக்கள், இராணுவத்தினர் இணைத்து ஆக்கிரமிக்கும் நடவடிக்கைக்காக வந்திருந்தபோது மக்கள் மீண்டும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்திப் போராட்டம் மேற்கொண்டனர்.

பிக்குவின் சகோதரரான அவரது சாரதி சம்பத் என்பவர் புல்மோட்டை பகுதி விவசாயி ஒருவரின் காணி வேலியை அத்துமீறி வெட்டி வாகனங்களை உள்ளே கொண்டு சென்றிருந்தார். இதனால் காணி உரிமையாளருடன் முரண்பாட்டு நிலை ஏற்பட அப்பகுதியில் ஒன்றுகூடிய மக்கள் ஆக்கிரமிப்பு முயற்சிக்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதன்போது பிக்குவான பனாமுரே திலகவங்சவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என அறியப்படும் இரண்டுபேர் அவர்களது கைத்துப்பாக்கிகளை எடுத்து மக்களை நோக்கிச் சுட முயற்சி செய்து கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். 30 பேருக்கு மேற்பட்டவர்கள் இவ்வாறு சிலை வைக்க வந்ததோடு அவர்களோடு 15 பேருக்கு மேற்பட்ட இராணுவம் சிவில் பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸார் தொல்லியல் துறையினர் மற்றும் தேரர்கள் வருகைதந்துள்ளனர்.

இப்பகுதியிலுள்ள முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களின் காணிக்குள் பயிர் செய்தால் பிக்குவின் ஆதரவாளர்கள் பயிர்ச் செய்கைகளை இரவோடு இரவாக அழித்து வருவதோடு, படையினர் மற்றும் சிவில் பாதுகாப்பு தரப்பினரை வைத்து தம்மை மிரட்டி அப்பகுதியிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பனாமுரே திலகவங்ச என்ற பிக்கு தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தின் பகுதிகளில் குறிப்பாக திருகோணமலையில் தமிழ்ப் பகுதிகளை இலக்குவைத்து இராணுவம் மற்றும் தொல்லியல் துறையின் ஆதரவோடு விகாரைகளைப் புதிதாக அமைத்து வருவதாகவும் பல ஆயிரக்கணக்கான காணிகளை பௌத்த பூமி என அடையாளப்படுத்தி வருவதாகவும் அந்தப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (அ-ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பை இந்தியன்ஸை வென்றது பெங்களூர்

மும்பை இந்தியன்ஸ் மற்றும் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் இந்தத் தொடரில் தனது முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் களத்தடுப்பை தேர்வு செய்த ரோயல் சலஞ்சர்ஸ் அணியினர் நாணயச்சுழற்சியை தமக்குச் சாதகமாகவே பயன்படுத்தினர்.

துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணியின் தொடக்க வரிசை வீரர்களை நிலைகுலையச் செய்தனர் பெங்களூர் அணியின் பந்து வீச்சாளர்கள். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ஒற்றை ஓட்டங்களுடனும் பதின்ம ஓட்டங்களுடனும் நடையைக் கட்ட ஒருகட்டத்தில் 48 ஓட்டங்களுக்கு முக்கியமான 4 இலக்குகளையும் இழந்து தடுமாறியது மும்பை இந்தியன்ஸ். இந்த நிலையில் மீட்பராக நடுவரிசையில் களமிறங்கிய திலக் வர்மா மாத்திரம் தனி ஆளாகப் போராடி அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற உதவி செய்தார். இவர் 4 ஆறு ஓட்டங்கள், 9 நான்கு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 46 பந்துகளில் 84 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். நெஹால் வதேரா மற்றும் அர்சாத் கான் ஆகியோரும் கைகொடுக்க மும்பை இந்தியன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட இருபது பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பெங்களூர் அணி சார்பாக அதிகபட்சமாக கர்ண் சர்மா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

172 எனும் வெற்றியிலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பெங்களூர் அணியின் துவக்க ஆட்டக்காரர்களான விராட் கோலி மற்றும் டூ பிளஸிஸ் ஜோடி மிகச்சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றனர். முதலாவது இலக்குக்காக 148 ஓட்டங்கள் பகிரப்பட்டது. மும்பை அணிக்கெதிராகப் பெறப்பட்ட நான்காவது மிகச்சிறந்த ஆரம்ப இணைப்பாட்டம் இதுவாகும்.

டூ பிளஸிஸ் 6 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 43 பந்துகளில் 7[illegible] ஓட்டங்களை [illegible] விராட் கோலி [illegible]மிழக்காமல் 5 [illegible] ஓட்டங்கள், 6 [illegible]கு ஓட்டங்கள் [illegible]ளடங்கலாக 49 [illegible]களில் 82 ஓட்[illegible]ளையும் பெற்[illegible] கொடுத்தனர். [illegible]யில் 16.2 பந்[illegible]ரிமாற்றங்கள் [illegible]வில் வெற்றியி[illegible]க அடைந்தது [illegible]ல் சலஞ்சர்ஸ் [illegible]களூர் அணி. [illegible] வீச்சில் அர்சாத் கான், கமரன் கிரீன் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். இதன் மூலம் மும்பை அணி தனது முதலாவது ஆட்டத்தில் பதினோராவது முறையாகத் தோல்வியடைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. டூ பிளஸிஸ் சிறப்பாட்டக்காரராகத் தெரிவுசெய்யப்பட்டார். (ஓ-ரி1)


## சமையலாள் தேவை

யாழ்.நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை.

• சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

077 959 2628

## காணி விற்பனைக்கு

ஆறுகால் மடம் பகுதியில் (மாநகரசபை எல்லைக்குள்) ஒரு பரப்பு காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு. சிறிய அளவிலான வீடு ஒன்றினை கட்டவோ வீட்டுத்திட்டத்திற்கோ பொருத்தமானது. வாங்க விரும்புவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (தரகர் தேவையில்லை).

பார்வையிடும் நேரம் மாலை 5.30 – 6.30 வரை

தொடர்பு : 077 482 5587

DMI COMPUTER EDUCATION

Hot Line: 0777173517

Auto CAD

2D & 3DModeling

புதிய பிரிவுகள் ஆரம்பம்- 5/4/2023- 9 am

DMI COMPUTER EDUCATION

113, கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம். Tel:. 021 222 4403

129/2, M. M. V. வீதி, நெல்லியடி. Tel:. 021 226 2470

## வேலை வாய்ப்பு




உதயன் பத்திரிகை நிறுவனத்தின் வவுனியா கிளைக்காரியாலயத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1) எழுதுவினைஞர் (Clerk)

2) சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள். (Marketing Executive)

ஆர்வமுள்ளவர்கள் கீழ் உள்ள மின்அஞ்சல் முகவரி அல்லது தபால் மூலம் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

Co/U/V0099
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

admin@uthayan.com

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-09 வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- ✓ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- ✓ கைதடி சந்தியிலிருந்து 500M தூரம்
- ✓ A-09 வீதியிலிருந்து 50M தூரத்தில் காணி உள்ளது.

தொடர்பு: 076 4365 814
076 7390 413

(CS 24222) A-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 66 பரப்புக் காணி (நிலப்பரப்பு) மட்டுவில் காபற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.

1 பரப்பின் விலை 150,000/=

3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM தூரம்.

தொடர்பு: 076 755 8606
077 6385 683

(CS 24256) A-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **அச்செழுப்** பகுதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✓ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது).
- ✓ 1 பரப்பின் விலை காபெற் வீதியை பிரதான முகப்பாக கொண்ட காணிகள் 15 இலட்சம்,
- ✓ 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**
077 8147 389
077 9865 457

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 78 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை 200,000/-
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

தொடர்பு:- 076 733 6047
076 333 6079
076 733 6093

(cs22599) (N.J)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 48 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**
077 8147 389
077 9865 457

(CS 24275) (J-1)

## முதலாம் ஆண்டு நினைவுகள்



திருமதி சிவபாக்கியவதி கந்தசாமி

ஓராண்டு நகர்ந்தாலும் எம்மை விட்டு அகலா உங்கள் நினைவுகள்

இணுவில் மேற்கு,
இணுவில்

குடும்பத்தினர்

(CS 24274) (K - 1)


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]ரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.